**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

<u>OS.No</u>. 306/2017 பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

பெயர் : வேணுகோபால் வயது :75

த.பெ : முருக கவுண்டர் தாலுக்கா :போளூர்

கிராமம் : காலசமுத்திரம் தொழில் : விவசாயம்

**<u>23.06.2025 – பி.வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கில் 2 ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். என் தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் கண்ணப்ப கவுண்டர் அவர் எனக்கு பெரியப்பா ஆவார். என் தகப்பனாருக்கு நானும், வாதியும் பிள்ளைகள் ஆவார்கள். நான் மூத்தவர் ஆவேன். வாதி இளையவர். எங்களை தவிர எங்கள் உடன் பிறந்தவர்கள் 2 சகோதரிகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் 5 ம் பிரதிவாதி லட்சுமி மற்றும் 6 ம் பிரதிவாதி சுசீலா ஆவார்கள். லட்சுமி எனக்கு மூத்தவர், சுசீலா எனக்கு இளையவர். என் தாயார் பெயர் தஞ்சையம்மாள், வழக்கில் 4 ம் பிரதிவாதியாக உள்ளார். வழக்கு சொத்தானது காலசமுத்திரம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. என் தகப்பனார் முருக கவுண்டருக்கு மூதாதையர் வழி சொத்தில் சர்வே எண்.67 ல் 68 ¾ சொத்து, சர்வே எண்.74 ல் 12 ½ செண்ட் மற்றும் 6 ½ செண்ட் நிலமும் அதில் கிணற்றில் 1/3 பாகமும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய பெரியப்பாவும், என் தகப்பனாரும் சேர்ந்து சின்னப்ப கவுண்டரிடம் சர்வே எண்.122/3 ல் தாவா 1 வது அயிட்டத்தில் 2 ஏக்கர் 32 செண்ட் வாங்கினார்கள் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் மேல்பாதி நிலம் என் பெரியப்பா பாகமாகவும், கீழ் பாதி நிலம் என் தகப்பனாரும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். என் பெரியப்பா மேல்பாதி நிலத்தை ராமசாமி கவுண்டர் அவர்களுக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். கீழ்பாதி நிலம் 1 ஏக்கர் 16 செண்ட் ஆனது கிணறு வெட்டி பம்ப்செட் அமைத்து, அதில் கூரைவீடு அமைத்து அனுபவித்து வந்துள்ளார் என்றால் 1 ஏக்கர் 33 ½ செண்ட் நான் அவர் கிணறு வெட்டி பம்செட் அமைத்து, கூரைவீடு கட்டி அனுபவித்து வந்தார்.

3. அதன்பிறகு, 06.10.1969 ல் தியாகராஜன் மற்றும் பச்சையம்மாள் அவர்களிடமிருந்து எனது தகப்பனார் ரூ.1000 த்திற்கு தாவா 4 ம் அயிட்ட சொத்தை வாங்கினார்கள் என்றால் சரிதான். என் தாயாரின் தம்பியின் பெயர் சுந்தரேசன் ஆவார். அவர் சிறுவயதில் என் தாயாருக்கு திருமணம் நடைபெற்றவுடன் வந்துவிட்டார் என்றால் இல்லை. அவருக்கு திருமணம் 1962 ல் எனது தங்கை லட்சுமியுடன் திருமணமான பிறகு சுந்தரேசன் 1965 க்கு பிறகு எங்களுடன் இருந்தார். நான்

கூறுவது தவறு என்றால் சரியல்ல. அவர் சிறுவயதிலேயே என் தாயாருடன் வந்து, வசிக்க ஆரம்பித்துவிட்டார் என்றால் சரியல்ல.

4. சுந்தரேசன் அவர்கள் திருமணம் நடைபெறுவதற்கு முன்னரே ராணுவத்தில் சேர்ந்துவிட்டார். சுந்தரேசன் அவர்களுக்கு 1964 ல் திருமணம் நடைபெற்றது என்றால் இல்லை 1962 ல் தான் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற பிறகு சுந்தரேசன் அவர்கள் எனது அக்கா அவர்களை திருமணம் செய்தபிறகு கீழ்வெள்ளம் கிராமத்தில் சென்று வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி திருமணம் நடைபெற்ற பிறகு அவரால் கீழ்வெள்ளம் மற்றும் வேறு எங்கும் நிலம் வாங்க முடியவில்லை என்றால் எனக்கு அவர்கள் வாங்க முடியுமா முடியாதா என்ற விவரம் தெரியாது. 1971 ல் சுந்தரேசன் அவர்கள் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். மேலும், அதே வருடத்தில் Defence Security Service ல் Defence Service Corp ஆக சேர்ந்தார் என்றால் சரிதான்.

5. மேற்படி சுந்தரேசன் அவர்கள் மேற்படி Defence Service Corp ல் பணியாற்றினால், அவரால் சம்பாதிக்க முடியாது என்றும் எனது அக்கா அங்கு தனியாக உள்ளார் என்றும், அதனால் அக்கா அவர்களை எனது தகப்பனார் காலசமுத்திரத்திற்கு அழைத்து வந்து சுந்தரேசன் அவர்கள் சம்பாதித்ததில் தகப்பனாருக்கு அனுப்பி வைத்தால், அவர் நிலம் வாங்கி வைப்பதாக கூறினார் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. மேற்படி, கூறியபடி சுந்தரேசன் அவர்கள் எனது தாயார் பெயருக்கும், எனது அக்கா பெயருக்கும் மற்றும் எனது தகப்பனார் பெயருக்கும் மணியார்டர் மூலம் பணம் அனுப்பினார் என்றால் மேற்படி அனுப்பியதாக எனக்கு எனது தகப்பனார் எந்த தகவலும் எனக்கு கூறவில்லை. அதை தவிர, சுந்தரேசன் அவர்கள் லீவில் வரும்போது அவர் சம்பாதித்த பணத்தை கொடுத்துவிட்டு போவார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது.

6. மேற்படி, சுந்தரேசன் கொடுத்த பணம் மொத்தம் 5000 ரூபாய்கு மேல் எனது தகப்பனார் கையில் இருந்தது என்றால் எனக்கு பணம் விசயம் சம்மந்தமாக எதுவும் தெரியாது. 06.03.1974 ல் எனது தகப்பனார் ராஜி கவுண்டர் என்பவருக்கு சர்வே எண்.67 ல் 68 ¾ சொத்து, சர்வே எண்.74 ல் 12 ½ செண்ட் மற்றும் 6 ½ செண்ட் நிலமும் அதில் கிணற்றில் 1/3 பாகமும் ரூ.5000 க்கு விற்றுவிட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 06.07.1974 ல் எனது தகப்பனார் மேற்படி 5000 ரூபாயும் மற்றும் சுந்தரேசனிடம் பெற்ற 5000 ரூபாயும் சேர்த்து ரூ.10000/-க்கு பூச்சியம்மாள் மற்றும் வெங்கடேசன் ஆகியோரிடம் சர்வே எண்.122/1 பி - ல் 3 ஏக்கர் நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் மேற்படி கிரையம் பெற்றது உண்மை தான். ஆனால், என்னுடைய வருமானமும் சேர்த்து தான் அதில் இருந்தது. அதன்மூலம் தான் கிரையம் பெற்றார்.

7. சுந்தரேசன் அவர்களுக்கு அதில் பாதி உரிமை உள்ளது, முழுசொத்தும் எங்கள் குடும்பத்திற்கு உரிமை இல்லை என்றால் எனது தகப்பனார் மேற்படி சுந்தரேசனிடமிருந்து பெற்ற 5000 ரூபாய் மூலம் மேற்படி நிலத்தை கிரையம் பெற்றார் என்ற விவரத்தை அவர் எங்களிடம் தெரிவிக்கவில்லை. அப்படி பெற்றிருந்தால் அவர் சுந்தரேசனுக்கு பாதி பாகம் எழுதிவைத்து விட்டிருப்பார். சுந்தரேசன் அவர்கள் ராணுவத்தில் இருந்ததால் அவரால் நேரில் வரமுடியாது என்பதால் அச்சமயத்தில் சுந்தரேசன் அவர்களுக்கும் சேர்த்து எனது தகப்பனார் மேற்படி சர்வே எண்ணில் கிரையம் பெற்றார் என்றால் தவறு. 21.10.1980 ல் சுந்தரேசன் அவர்களுக்கு சர்வே

எண்.122/1பில் 1 ½ ஏக்கர் மேல்பாதி இடமும், கிணறு பம்செட்டில் பாதி பாகமும் சுந்தரேசன் அவர்களுக்கு செட்டில்மெண்ட் மூலம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. மேற்படி, செட்டில்மெண்ட் மூலம் கிரையம் பெற்ற நிலத்தை சுந்தரேசன் அவர்கள் கூட்டுப்பட்டா மூலம் பட்டா எண்.415 மூலம் அவர் பெயரிலும், முருக கவுண்டர் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக மேற்படி நிலத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

எதிர்தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-B.Salma,

District Munsif,
Polur.